முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார ஞானச் சுடரே
ஓங்கார ஞான பலமே
ஓங்காரன் வடிவாக வந்த
ஓங்காரக் குடில் வாழும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது தரிவை திங்கள்
இருபானீர் திகதி கதிரோன் வாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 22 ம் நாள் 09.10.2022, ஞாயிற்றுக்கிழமை)
இயம்புவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை கண்ணிச்சித்தர் யானும்
அருளுவேன் உலகம் நலம்பெற
பேசிட தரும ஞான பலமதை
பிரணவக்குடிலின் சக்தியாக நிரப்பி
4. நிரப்பியே மக்களை அழைத்து
நிறைவு நிம்மதி காணும்படி
அறம் செய்து பசிபிணி விரட்டி
அருளும் அரங்கனின் அனுகூலம் பெற
5. பெறவே உலகினில் மாற்றம்
பிரணவ சக்திவழி காணக் கூடும்
கூறவே ஞான சபை வந்து
குருவரங்கனை தொழுது இனிதே
6. இனிதே ஞானிகள் தருகின்ற
இணையிலா அருளமுது உண்டு
கனிவேலவனே தலைவனெனும்
கந்தப் பெருமான் வழிபாடு செய்து
7. செய்துமே சீமை எங்கிலும்
செபதபம் அரங்கன் பேரில்
மெய்ஞானம் வேண்டிச் செய்து
மேலவர்கள் துணைபட சேவை
8. சேவை அன்னதானமாக
செப்பிட உலகெல்லாம் செய்து
அவதார ஞான வள்ளல் வழி
அறமோடு சன்மார்க்கம் தன்னை
9. தன்னையே சகலதுமாக ஏற்று
தவராஜன் அவதார மகிமை
மண்ணுலகம் அடையும்படிச் செய்து
மகானே யாவும் என வணங்கி

10. வணங்கி சரணாகதி தன்னை
வாழுங்காலமேச் செய்து வர
இணங்கி கலியினில் ஞானிகள்
எல்லாத் திக்கிலும் ஆற்றலை

11. ஆற்றலை சக்திமிக்கபடி
அன்னதானமாக அருளாசியாக
மாற்றம்காணச் செய்துமே
மண்ணுலகை மீட்டருள்வர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–